https://www.al-feqh.com/ta



7

# ஸகாத் பெற தனுதியானவர்கள்



## பொருளடக்கம்


1. ஸகாத் பெற தகுதியானவர்கள்.
2. பரம ஏழைகள்
3. ஏழைகள்
4. ஸகாத்தை வசூலிப்பவரகள்;
5. புதிதாக இஸ்லாத்தை ஏற்று கொன்டவர்கள்
6. அடிமைகள்
7. கடனாளிகள்
8. அல்லாஹ்வின் பாதையில் சென்றவல்கள்
9. வளிப்போக்கன்

இவர்களில் எவர்களுக்கு ஸகாத் கொடுக்கப்பட

வில்லையோ அவர்களுக்கு ஸகாத்தை கொடுங்கள்


## ஸகாத் பெற தகுதியுடையவர்கள்

ஜகாத் பெறத் தகுதியுடையவர்கள் 8 கூட்டத்தினர் அவர்கள்அல்லாஹ் கூறுகிறான் - *{(ஸகாத் என்னும்) தானங்கள் தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடன் பட்டிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்), வழிப்போக்கர்களுக்குமே உரியவை. (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும் - அல்லாஹ் (யாவும்) அறிபவன், மிக்க ஞானமுடையோன்}.*

*[தவ்பா – 60].*

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



## 1-பரம ஏழைகள்

### பரம ஏழைகள்

உணவிலிருந்தும், குடிபாணத்திலிருந்தும் மற்றும் ஆடையிலிருந்தும் தனது தேவையும் தனது குடும்ப தேவையையும் நிறைவேற்ற பொருளாதாரம் இல்லாதவர்கள்.

அவருக்கும் அவருடைய குடும்பத்திற்கும் ஒரு வருடத்திற்கு போதுமான சொத்தை கொடுக்கப்படும்



## 2-ஏழைகள்

### ஏழைகள்

மிஸ்கீன் என்பவர்கள் தனது வாழ்க்கை செலவு பூரணமாக இல்லாதவர்கள். உதாரணமாக ஒருவருக்கு 200ரூபாய் தேவைப்பட்டு 100ரூபாய் இருப்பவர்கள். இவர்களுக்கு ஸகாத்திலிருந்து ஒரு வருட பூரண செலவு வளங்கப்படும்.



www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



## 3-ஸகாத்தை வசூலிப்பவர்கள்

### ஸகாத்தை வசூலிப்பவர்கள்

ஸகாத் பணத்தை ஒன்று சேர்த்து அதனை உரிளவர்களுக்கு பிரித்து கொடுக்க கூடியவர்களுக்கு அந்த நாடு பணம் கெபடுக்காமல் விட்டால் ஸகாத்தின் பணத்திலிருந்து அவர்களுக்கு ஒரு பங்கு கொடுக்க வேண்டும். ஏன் எனறால் அவரகள் அதில் அவர்களை அர்பனிக்கிறார்கள். வேலை செய்ய கூடியவர்கள் என்றால் அதனைசேர்ப்பவர்கள், எழுதவர்கள், பாதுகாப்பவர்கள் மற்றும் தகுதியுடையவர்களுக்கு பிரிதிது கொடுப்பவர்களும் அடங்குவர்



## 4-உள்ளங்கள் ஈர்க்கப்பட்டவர்கள்

### உள்ளங்கள் ஈர்க்கப்பட்டவர்கள்

அவர்களின் சமூகத்தில் வழங்கப்படும் தலைவர்கள்,இஸ்லாத்தை ஏற்பார்கள் என்றோ அல்லது கெடுதியை தடுப்பார்கள் என்றோ ஆதரவு வைக்கப்படக்கூடியவர்கள்அல்லது அவர்களுடைய ஈமானின் பலத்தின் காரணமாக முஸ்லிம்களை அவர்களின் எதிரியிலிருந்து பாதுகாப்பார்கள் என்று ஆதரவு வைக்கப்படக் கூடியவர்கள்

அவர்களின் உள்ளத்தில் அன்பு உருவாகும் வரை ஸகாத் பணத்திலிருந்து கொடுப்பார்கள்




## 5-அடிமைகள்

### அடிமைகள்

உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமை இவர் தன்னை தன்னுடைய அடியானிடம் இருந்து விலைக்கு வாங்கியவர் இவருடைய தேவையான அளவுக்கு பணம் கொடுக்கப்படும்

அவர்கள் ஒவ்வொருவரும் சுவந்திரவாதிகளாகவும் கொடுக்கல் வாங்களி;ல் பிரயோசனம் பெறக்கூடியவர்களாகவும் சமூகத்தல் பயன்மிக்க பிரயையாக மாறவும் மபற முடியும். அல்லாஹ்வின் வனக்கங்களை பூரணமாக நிறைவேற்ற முடியும், அவ்வாறுதான்





www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



www.al-feqh.com/ta

## 6-கடன்காரர்கள்

**கடன்காரர்கள்**

கடன் வந்தால் கடனாளியாகும்

கடனாளிகள் இரண்டு வகை படுவார்கள்

முதலாமவர் அவர்கள் அவருடைய தேவைக்காக கடன் அடுத்த ஏழை மனிதர் வருடைய கடனைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு பணம் கொடுக்கப்படும்

இரண்டாவது மனிதர் ஒரு கூட்டத்தை சீர்படுத்துவதற்காக கடன் கொடுத்தவர் அவர் பணக்காரராக இருந்தாலும் கொடுக்கப்படும்




## 7-அல்லாஹ்வுடைய பாதையில் போராடுபவர்கள்

**அல்லாஹ்வுடைய பாதையில் போராடுபவர்கள்**

அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்பவர்கள்

இவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்வதற்கு தேவையான அளவு கொடுக்கப்படும்



## 8-வழிப்போக்கன்

**வழிப்போக்கன்**

பணம் இல்லாமல் பிரயாணம் தீர்ந்துபோன பிரயாணி

ஸகாத் பெறுவதிலிருந்து தேவையற்றவனாக இருந்தால் தன்னுடைய ஊருகு கொடுப்பான்



## ஸகாத் வழங்க முடியாதவர்கள்

### 01- பணக்காரர்கள் கடுமையாக உழைக்கின்றவர்கள்

நபியவர்கள் கூறினார்கள் «ஸகாத்தில் பணக்காரனுக்கும் சம்பாதிக்க சக்தியுடையவனுக்கும் பங்கு இல்லை. »(ஆதாரம் அபுதாவுத்).

**வழிகாட்டல்கள்**

01-கூறப்பட்ட எட்டி கூட்டத்தார;;;;;;கள் தவிர வேறு எவருக்கும் ஸகாத் கொடுக்கப்பட மாட்டாது பள்ளி கட்;டுதல், வைத்தியசாலைகளை கட்டுதல் இவ்வாறு ஏனைய ஸகபத்ததை செலவலிப்பதற்கு இருக்கும் நல்ல காரியமாக இருந்தாலும் ஸகாத் கொடுக்கப்படமாட்டாது.

02- ஸகாத்தை கொடுக்கும் போது எட்டு கூட்டத்திற்கும் கட்டாயம் கொடுக்க வேண்டியதில்லை. ஏதாவது ஒரு பகுதியினருக்கு கொடுத்தால் போதுமானது.

### 02-பெற்றோர்கள் பிள்ளைகள் மனைவி செலவளிப்பது கடமையானவர்கள்

செலவு கடமையானவர்கள் மீது ஸகாத் கொடுப்பது தூடாது பெற்றோர்தள் அவர்களின் தாய் தந்தை பிள்ளைகள் பெரப்பிள்ளைகள் இவர்களுக்க்கு ஸகாத் கொடுப்பது கடமையான செலவை கொடுப்பதாக அமையும் யார் அவர்களுக்கு ஸகாத் கொடுக்குறாரோ அவர் தானுக்கே ஸகாத் கொடுப்பதை போல ஆகும் கடமை நிறைவேற மாட்டாது

### 03-உள்ளம் ஈர்க்கப்படாத காபிர்கள்

காபிர்கள் உள்ளம் ஈர்க்கப்படவில்லை என்றால் அவர்களுக்கு ஸகாத் கொடுக்க கூடாது.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «பனக்காரர்களிடம் இருந்து எடுத்து ஏழைகளுக்கு கொடுக்கப்படும்»(ஆதாரம் புஹாரி முஸ்லிம்),

அதாவது முஸ்லிமாக பணக்காரர் இருந்து அவர்கள் ஏழையாக இருந்தாலும் சரி இல்லா விட்டாலும் சரி. ஸகாத் என்பதன் நாட்டம் பணக்கார்கள் ஏழை ஏழை முஸ்லிம்களுக்கு வழங்குவதையே குறிக்கும் அதன் மூலமாக அன்பு, சகோதரத்துவம் என்பன ஏறபடுகின்றன. அதனை காபிர்களுக்கு வழங்குவது கூடாது.

### 04. நபி ஸல் அவர்களின் குடும்பத்தார்கள் (நபி அவர்களின் குடும்பம்: ஹாசிம் கிழையார்கள்)

நபி ஸல் அவர்களின் குடும்பத்தினர்களின் கண்ணியத்திற்காக ஸகாத் அளர்களுக்கு ஹலாலாக மாட்டாது.

நபி ஸல் அவர்கள் கூறினாரிகள் «நிச்சயமாக இந்த ஸதகாகள் மனிதர்களின் சொத்துக்களின் அழுக்குகலாகும் அவைகள் முகம்மதுக்கும் முகம்மதின் குடும்பத்திற்கு ஹலாலாக மாட்டாது»(ஆதாரம் முஸ்லிம்).

### 05-நபி ஸல் அவர்களின் குடும்பத்தினர்களால் உரிமையிடப்பட்டவர்கள்

அவர்கள் நபி ஸல் அவர்களின் குடும்பத்தால் உரிமையிடப்பட்ட அடிமைகள் நபி ஸல் அவர்கள் கூறினார்கள்: «ஸகாத் எங்களுக்கும் எங்களால் உரிமையிடப்பட்ட அடிமைகளுக்கும் ஹராமாகும்.»(ஆதாரம் திர்மிதி).அதாவது பனூ ஹாஷிம் குடும்பத்தாருக்கு ஸகாத் ஹராமாகும்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



## 06-உரிமை சீட்டு எழுதப்படாத அடிமை

அடிமைக்கு ஸகாத் கொடுக்கப்பட மாட்டாது ஏனெனில் நிச்சயமாக அடிமையின் சொத்துக்கள் எஜமானுக்குறியதாகும்.

ஸகாத் கொடுக்கப்பட்டால் அது எஜமானுக்கு சொந்தமாகிவிடும் எனவே அடிமைக்கு செலவலிப்பது எஜமானுக்கு கடமையாகும் நிறுவனங்களின் உதவிகள் விலக்கிதல்லப்படும்

நிச்சயமாக அடிமைக்கு எழுதிய கடன் இருந்தாலும் அல்லது அவர் ஸகாத்தை சேகரித்தவராக இருந்தால் அவருக்கு ஸகாத் பணத்திலிருந்து கொடுக்கப்படும் ஏனெனில் அவர் வாடகைக்கு அமர்தப்பட்டவரை போல எஜமானின் அனுமதியுடன் வாடகைக்கு அமர்தப்பட மடியும்

### வேலை செய்ய கூடியவர்களுக்கு ஸகாத் பணம் கொடுத்தல்.

ஸகாத் வேலையில் ஏடுபடுபவனுக்கும் கடனாளிக்கும் அவர்கள் பணக்காரர்களாக இருந்தாலும், உழைப்பதற்கு சக்தியுடையவராக இருந்தாலும் அவர்கள் மார்க்கத்தை படிக்க தன்னை அர்பனித்தால் ஸகாத் பணம் வளங்கப்படும்.ஏன் என்றால் மார்க்க அறிவை தேடுவது அல்லாஹ்வின் பாதையிர் போர் செய்வதை போன்றாகும்.அவ்வாறுதான் மார்க்க அறிவில் முயற்சி செய்ய கூடியவர்களும், புதிதாக இஸ்லாத்தை ஏற்று கொண்டவர்களும் ஆகும்.ஒருவர் உழகை;க சக்தி இருந்து தனது சுன்னதான வணக்கத்திற்காக உழைப்பை விட்டால் அவருக்கு ஸபாத் வளங்கப்படமபட்டாது.ஏன் என்றால் அறிவை தேடுவதை விட வணக்கத்தின் விரயோசனம் சுறுங்கியதாகும்.

அல்லாஹ் கூறுகிறான் {நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும்இ பூமியிலிருந்து நாம் உங்களுக்கு வெளிப்படுத்தித் தந்த (தானியங்கள்இ கனி வகைகள் போன்ற) வற்றிலிருந்தும்இ நல்லவற்றையே (தான தர்மங்களில்) செலவு செய்யுங்கள்; அன்றியும் கெட்டவற்றைத் தேடி அவற்றிலிருந்து சிலவற்றை (தான தர்மங்களில்) செலவழிக்க நாடாதீர்கள்; ஏனெனில் (அத்தகைய பொருள்களை வேறெவரும் உங்களுக்குக் கொடுத்தால் வெறுப்புடன்) இ கண் மூடிக் கொண்டேயல்லாது அவற்றை நீங்கள் வாங்க மாட்டீர்கள்! நிச்சயமாக அல்லாஹ் (எவரிடத்தும்இ எந்தத்) தேவையுமற்றவனாகவும்இ புகழுக்கெல்லாம் உரியவனுமாகவும் இருக்கின்றான் என்பதை நீங்கள் நன்கறிந்து கொள்ளுங்கள்.

மேலும்

(தான தர்மங்கள் செய்வதினால்) வறுமை (உண்டாகிவிடும் என்று அதைக்) கொண்டு உங்களை ஷைத்தான் பயமுறுத்துகிறான்; ஒழுக்கமில்லாச் செயல்களைச் செய்யுமாறும் உங்களை ஏவுகிறான்; ஆனால் அல்லாஹ்வோஇ (நீங்கள் தான தருமங்கள் செய்தால்) தன்னிடமிருந்து மன்னிப்பும்இ (அருளும்இ பொருளும்) மிக்க செல்வமும் (கிடைக்கும் என்று) வாக்களிக்கின்றான்; நிச்சயமாக அல்லாஹ் விசாலமான (கொடையுடைய)வன்; யாவற்றையும் நன்கறிபவன் } (பகறா – 267,268).



www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



www.al-feqh.com/ta

# ஸகாத் விநியோகம் செய்தல்

## விநியோகிக்கும் நேரம்

சங்கடங்கள் இல்லையென்றால் நேரம் வந்தவுடன் பிற்படுத்தாமல் ஸகாத்தை உடனடியாக விநியோகம் செய்வது அவசியமாகும்

அல்லது பொருட்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளது ,ஸகாத் பொருட்கள் தூரத்தில் இருந்தாலும் பிற்படுத்தலாம்

உடனடியாக விநியோகம் செய்வதற்கான ஆதாரம் அல்லாஹ் கூறுகிறான் -{அவற்றை அறுவடை செய்யும் காலத்தில் அதற்குரிய (கடமையான) பாகத்தைக் கொடுத்து விடுங்கள்.} (அன்ஆம் - 141). {மேலும் இன்னும் ஜகாத்தைக் கொடுங்கள்; }, (நூர் 56). ஏவல் என்பது உடனடியாக விநியோகம் செய்வதை குறிக்கிறது.

## ஸகாத்தை முற்படுத்துவதற்கான சட்டம்

முற்படுத்தும் போது நிஸாபை பூரணமாக இருந்தால் இரண்டு வருடங்களுக்கு ஸகாத்தை முற்படுத்த முடியும்.

## ஸகாத் விநியோகம் செய்வதற்கான இடம்

எந்த ஊரில் ஸகாத் பொருட்கள் உல்லதோ அந்த ஊர் வாசிகளுக்கு ஸகாத்தை விநியோகம் செய்வதே மிக ஏற்றமானது

ஏதும் தேவைகள் இருந்தால் ஊர் தூரத்தில் இருந்தாழும் சமீபத்தில் இருந்தாழும் ஸகாத் பொருட்களை மாற்ற முடியும் (ஊர் கடும் வருமையில் இருப்பது) அல்லது (ஸகாத் பொருட்களின் சொந்தக்காரர்களின் உறவினர்கள் தூர ஊரில் இருப்பது இவர்களுக்கு கொடுப்பதால் நிச்சயமாக நலன்களை பெறலாம்){அல்லாஹ் கூறுகிறான் - ஸகாத்தை பரம ஏழைகள், ஏழைகளுக்கு கொடுங்கள்;} (தவ்பா - 60). அது ஸதகாவாகவும் குடும்பத்துடன் சேர்ந்து போவதாகவும் அமையும்

## ஸகாத்தை விநியோகம் செய்வதற்கு முடியுமான பொருட்களும் முடியாத பொருட்களும்

சொத்துக்களின் நடுத்தரமானதை பகுதியில் இருந்து ஸகாத் பொருட்கள் எடுக்கப்படும். மிக நல்லதும் மிகழ் தாழ்ந்த்ம் வழங்கப்படமாட்டாது. கெழுத்த, கற்பிணி மிருகங்கள், மலட்டு மிருகங்கள் அல்லாதவைகளை, பழங்களில் மிகச் சிறந்தவை இவைகளை ஸகாத் வழங்கியவர் மனம் விரும்பி கொடுக்கலாம்.

அதே போல தாழ்வானவற்றை கொடுப்பது கூடாது. ஆனால் அவரிடம் தாழ்வானவை மட்டுதே உள்ளது எனின் அவற்றை வழங்குவதில் பிரச்சனையில்லை. அல்லாஹ் கூறுகிறான் -{நல்லவற்றையே (தான தர்மங்களில்) செலவு செய்யுங்கள்; அன்றியும் கெட்டவற்றைத் தேடி அவற்றிலிருந்து சிலவற்றை (தான தர்மங்களில்) செலவழிக்க நாடாதீர்கள்} (பகறா – 267)

நபி ஸல் அவர்கள் கூறினாரிகள் «வசூலிப்பவர் விரும்பினாலே தவிர வயதானவற்றையோ (இனம்பெருக்காத பிராணிகள்) குறைகள் உள்ளவற்றையோ (வயோதிபம்:வயதில் பெரியவர்) ஆண் பிராணிகளையோ (நொண்டியான) ஸகாத்தாகப் பெறக் கூடாது»(புஹாரி). நபி ஸல் அவர்கள் கூறினாரிகள் «மனிதர்களிலே சிறந்த பணத்தை கொடுப்பவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன்»(புஹாரி)

# வழிகாட்டல்கள்

01-சகாத் கொடுக்க கூடியவர்கள் வழமை போன்று தகுதி இல்லாதவர்களுக்கு கொடுக்காமல் தகுத்யானவர்களுக்கு கொடுக்க முயற்சி செய்வது அவசியமாகும்.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள்: «ஸகாத்தில் பணக்காரனுக்கும் உழைப்பதற்கு சக்தியுடையவனுக்கும் பங்கு கிடையாது» (ஆதாரம் அபூதாவுத்)

02-சகாத் கொடுக்க கூடியவர்வர் சகாத் பெறத் தகுதியானவரை அதன்பால் அதிகம் தேவையுடையவரை கண்டறிய முயற்சிக்க வெண்டும், சொந்தகார ஏழை அல்லது அறிவை தேடும் ஏழை போன்று அதிகமான தேவையுடையவே மிக தகுதியானவர்கள்.

https://www.al-feqh.com/ta



www.al-feqh.com/ta

### ஸகாத் பெற மிக தகுதியானவர்

ஸகாத் கொடுப்பவர் யார் ஸகாத் பெற தகுதியானவர் என்று முயற்சி செய்து தேடுவது அவசியமாகும்(மனிதர்களால் வரணிக்கப்படுபவர்)

சமீபத்தில் இருக்கினற ஏழை அல்லது கற்கின்ற ஏழை மாணவன்

இது போன்றோருக்கு கொடுக்கலாம்

## ஸகாத்தின் முக்கியமான செயற்பாடுகள்

### ஸகாத்தின் பெறுமதி

அடிப்படையில் ஸகாத் என்பது கட்டாயதான குறிப்பான பொருட்களில் இருந்து வெளியாக்குவதாகும் என்றாலும் தேவையின் பொழுது அல்லது கூடுமான நலனுக்காக வேண்டி அதனுடைய பெறுமதியை எடுக்க முடியும்.

### ஸகாத்துடன் நாட்டின் தொடர்பு

அடிப்படையில்ஸகாதுடையபணம்அரசுக்குரியது, ஸகாத் கொடுக்க கூடியவர்களுக்கு எந்த தனி நிர்னனைபளையும் விட்டு வைக்காது , எனவே அரசு அவ்வாறு பொறுப்பை விட்டு விட்டால் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அது கடமையாகும்.

### ஸகாத் பனத்தில் ஸகாத் பெறுவதற்கு தகுதியானவர்களுக்கு பிரயோசனப்படும் பெருட்டு முதலீடுகள் செய்ய முடியும்.

அவசரமாக ஸகாத் பணத்தை வினியோகிக்க வேண்டி தேவை இல்லா விட்டால் அவர்களுக்கு பிரயோசனமான மார்க்கம் அனுமதித்த விடயங்களில் முதலீடு செய்ய முடியும்.

### பின்வரும் உதாரணங்கனை போல பொருளாதாரத்தில் ஸகாத்தை தவிர வேர கடமைகள் உண்டா?

ஸகாத் என்பது பொருளாதாரத்தில் சக்தி பெற்ற குறிப்பானவர்கனுக்கு கடமையாகும் மேலும் சக்தியுடையவருக்கு கட்டாயமான குறிப்பான ஒள்றாகும்.

- பொருளாதாரத்தில் ஸகாத்தை தவிர வேர கடமை ஒன்று இருக்கிறது அது பிரச்சனையானது, அதற்கு அறியப்பட்ட அளவு கிடையாது,அது ஸகாத்தை போன்று நிலைத்திருப்பதில்லை, அது பொருளாதாரம் இருந்ததற்காக கடமையாகாது, அது சில காரனங்களுக்காக கடமையாகும், ஆனால் அது கடமையாவதற்கு பொருளாதாரம் ஒரு நிபந்தனையாகும உதாரணம்: பெற்றோர்களுக்கு,சொந்த பந்தங்களுக்கு மற்றும் மனைவிக்கு செலவளித்தல்; பைத்தல் மாலின் பணத்திலிருநிது செலவளிக்கப்படாவிட்டால் சோதனைகளின் போது கெட்டதை விட்டும் தடுத்தல்.
- ஸகாத்திற்கு நிகராக வரிகள் பெற்றால் அது ஸகாத் ஆகாது. ஸகாத் என்கது வணக்கவழிபாடுகளில் உள்ளவையாகும். வரி என்பது சிவில் சட்ட கடமையாகும். அவை இரண்டும் ஒன்றாகமாட்டாது.

